(73)

# உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை. திருமதி.ஆ.மணிமேகலை, பி.இ.,

ந.க.எண்.429/2021 நாமா — நாள்.17.06.2021.

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவு – நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – நாமக்கல் மாவட்டம்– இராசிபுரம் வட்டம்/ ஊராட்சி ஒன்றியம் – 85.ஆர்.கொமாரபாளையம் ஊராட்சி/கிராமம் – சர்வே எண்கள்.21/10pt,2B3pt–ல் 1.87 ஏக்கர் பரப்பில் அமையும் ஸ்ரீ பாலாஜி நகர் என்ற அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 04.05.2017
2. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 13.10.2017
3. அரசாணை (நிலை) எண். 55 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 02.05.2018.
4. அரசாணை (நிலை) எண்.21 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 05.02.2019.
5. அரசாணை எண்.100 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ.4(3))த் துறை நாள்.01.07.2019.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறை ந.க.எண். 13193/2017/LA2 நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
7. மனுதாரர் திருமதி.ப.கமலம், இராசிபுரம் அவர்களின் ஆன்லைன் எண். DTCP/L/0799875/2017, நாள்.01.02.2021.
8. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்.21.04.2021 மற்றும் 28.04.2021.

**********

**உத்தரவு:**

பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 6–ல் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் பார்வை 7–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு பார்வை 8–ல் கண்ட கடிதத்தினை தொடர்ந்து கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம்/ ஊராட்சி ஒன்றியம், 85.ஆர்.கொமாரபாளையம் ஊராட்சி/கிராமம், சர்வே எண்கள்.21/10pt, 2B3pt–ல் 1.87 ஏக்கர் பரப்பில் அமையும் ஸ்ரீ பாலாஜி நகர் என்ற அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு <u>ம.வ(வரன்முறை)/நாமாஎண்.25/2021</u> என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

P.Kamalam

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 1.87 ஏக்கர் அல்லது 81457.20 ச.அடி |
| சாலைகளின் மொத்த பரப்பு | : | 18497.75 ச.அடி |
| மொத்த மனைகள் | : | **34 எண்ணம்** **(1–5 சாலைக்கு ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது).** |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | **16 எண்ணம்** |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : | 11-20, 22-25,28 and 30. |
| விற்கப்பட்ட மனைகளின் பரப்பளவு | : | **33106.00 ச.அடி** |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 18 எண்ணம் |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : | 6-10,21,26,27,29,31,32W and 34-38. |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவு | : | 29853.45 ச.அடி |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு பூங்கா (மனை எண்.32E, 33) | : | **3045.00 ச.அடி** |

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்**

1) பரிசீலனை கட்டணம் :

| | |
|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் 15 மனைகளுக்கு ரூ.7,500/- செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனை கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

2) அனுமதியற்ற இம்மனைப்பிரிவுக்கு வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய உரிய கணக்குத் தலைப்பிலும் வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கி கணக்கிலும் செலுத்தல் வேண்டும்.

3) வரைபடத்தில் கண்டுள்ள OSR இடங்களை தவிர்த்து இதர மனைகளுக்கு அரசாணையின்படி உரிய கட்டணங்களை பெற்றுக்கொண்டு வன்முறைப்படுத்த தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுததமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

P. Kamal

75

## நிபந்தனைகள்

1. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 13.10.2017–ல் விதி எண்.7(g)(ii)–ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
3. இம்மனைப்பிரிவில் அரசு புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு குறித்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
5. மனைப்பிரிவின் ஊடே Tower Line, HT Line, LT Line and Power Line ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு மாற்றிய பின்னரே முறைப்படுத்தப்படல் வேண்டும்.
6. மனைப்பிரிவு அமையும் புல எண்களில் வழக்கு ஏதும் நிலுவையில் இருப்பது பின்னர் அறியப்பட்டால் மனைப்பிரிவுக்கு வழங்கிய ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. அரசாணை எண்.100 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.01.07.2019–ல் குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்ற வேண்டும். மேலும் அரசாணையின்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு பகுதி மனுதாரரால் தானமாக சம்மந்தப்பட்ட துறையில் ஒப்படைப்பு செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
8. பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5 ஆகிய அரசாணைகளில் குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
9. சாலை மற்றும் பொது ஒதுக்கீடு ஒப்படைப்பு செய்யப்படவில்லை எனில் இம்மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் முன் அறிவிப்பு இன்றி ரத்து செய்யப்படும் என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்படுகிறது.

**இணைப்பு**

மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.

17/6/17

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல்.

17.6.21

**பெறுநர்,**

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
இராசிபுரம் ஊராட்சி ஒன்றியம்,
இராசிபுரம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

P. Kamal

<u>நகல்</u>

1. தலைவர்,
   85.ஆர்.கொமாரபாளையம் ஊராட்சி,
   இராசிபுரம் ஊராட்சி ஒன்றியம்,
   இராசிபுரம் வட்டம்,
   நாமக்கல் மாவட்டம்.

2. திரு.கமலம் மற்றும் இருவர்,
   க/பெ.பழனிவேல்,
   5/166A, கணபதி நகர்,
   இராசிபுரம் வட்டம்,
   நாமக்கல் மாவட்டம்.

3. Tamil Nadu Real Estate Regulatory
   Authority (TNRERA),
   No:1A, 1st Floor,
   Gandhi Irwin Bridge Road,
   Egmore,
   Chennai – 600 008.

4. சார்பதிவாளர்,
   இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகம், நாமக்கல் வட்டம், நாமக்கல் மாவட்டம். } சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.

5. உதவி இயக்குநர் (நில அளவை),
   நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   நாமக்கல் மாவட்டம். } சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு.

6. இருப்புக் கோப்பு

P. kamal
[handwritten Tamil signature]

V. S. Kavitha

**இராசிபுரம் வட்டார வளர்ச்சி அலுவலரின் (கி.ஊ), நடவடிக்கைகள்**
**ஆணை பிறப்பிப்பவர் :திரு.இரா.வரதராஜன்.,**

**ந.க.எண்.2533/2021/தி5, நாள்.15.12.2021**

**பொருள் :** வீட்டுமனைப்பிரிவுகள் – நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டாரம் – 85.ஆர்.கொமாரபாளையம் ஊராட்சி சர்வேஎண்.21/10Pt,2B3Pt-ல்1.87ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள "ஸ்ரீ பாலாஜிநகர்"அனுமதியற்ற மனைபிரிவு வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டது. மனைப்பிரிவுகள் முறைப்படுத்துதல், அங்கீகாரம் வழங்கி ஆணையிடல் – தொடர்பாக.

**பார்வை:**
1) அரசாணைஎண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 04-05-2017
2) அரசாணைஎண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை(UDE 4(3) நாள்–13-10-2017.
3) திருமதி.கமலம் மற்றும் இருவர்அவர்களின்ஆன்லைன் விண்ணப்பம் எண் – DTCP/L/0799875/2017நாள்.01.02.2021
4) மாவட்டநகர் ஊரமைப்பு, உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண்.429/2021/நாமா,நாள்.17.06.2021.

**ஆணை**

85.ஆர்.கொமாரபாளையம் ஊராட்சி சர்வேஎண்.21/10Pt,2B3Pt-ல்1.87ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள "ஸ்ரீ பாலாஜிநகர்" என்ற பெயரில் வீட்டுமனைகள் ஏற்படுத்தி முறையான அங்கீகாரம் இல்லாமல் வீட்டுமனைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. பார்வை(1) மற்றும் (2)–ல் காணும் அரசாணைகளில் அங்கீகாரம் இல்லாத வீட்டுமனைகளை வரன்முறைப்படுத்திக் கொள்ள வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து, பார்வை 3–ல் காணும் ஆன்லைன் விண்ணப்பம் வாயிலாக 14 வீட்டுமனைகளுக்கு அங்கீகாரம் வழங்கிட கோரி நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளதையடுத்து பார்வை 3ல் காணும் ஆன்லைன் விண்ணப்பம் ஏற்கப்பட்டு, பார்வை 4–ல் காணும் கடிதம் மூலம் மாவட்டநகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அவர்களால் ஒருசில நிபந்தனைகளின்படி அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைபடுத்தக் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ( In Principal approval of Layout Frame work ) ம.வ(வரன்முறை)/நாமாஎண்.25/2021–ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2) வீட்டுமனையிடங்களாக பிரிக்கப்பட்ட 34 மனையிடங்களில் 16 மனையிடங்கள் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கும் முன்னரே வீட்டுமனைகள் பல்வேறு தேதிகளில் பல்வேறு ஆவணபதிவு வாயிலாக விற்பனை செய்ததன் மூலம் நிலஉடமை (Title of ownership) மாறிவிடுவதால் மேற்கண்ட மனையிடங்களை வாங்கியவர் தனியே விண்ணப்பித்து மனையிடங்களை முறைப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதால், எஞ்சியுள்ள விற்பனை செய்யப்படாத 29853.45 சதுரஅடி பரப்பளவில் பிரிக்கப்பட்ட 18 மனையிடங்களில் பூங்கா/திறவிடத்திற்காக ஒதுக்கப்பட்ட 3045 சதுரஅடி நீங்கலாக இதர 16 மனையிடங்களுக்கு கொள்கை அளவில் வரன்முறைப்படுத்தி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

P. Kamal

(79)

3) மேலும், நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற மனைப்பிரிவுகளுக்கான வரைபடம் முழுமையாக பரிசீலனை செய்து ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டது. மனுதாரரால் அளிக்கப்பட்ட ஆவணங்கள் பரிசீலனை செய்தும், வீட்டுமனைபிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் குறித்து பிரஸ்தாப இடத்தினை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களால் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. 85.ஆர்.கொமாரபாளையம் ஊராட்சி சர்வேஎண்.21/10Pt,2B3Pt-ல்1.87ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் கிழமேலாக மற்றும் தென்வடலாக மொத்தவிஸ்தீரணம் 18497.75 சதுரடியில் அமைக்கப்பட்டுள்ள 20,22அடி மனைப்பிரிவு சாலைகள் இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணஎண். 6458/2021 நாள்.16.11.2021 அன்று 85.ஆர்.கொமாரபாளையம் கிராமஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

4) மேற்படி விற்பனை செய்யப்படாத 29853.45 சதுர அடி கொண்ட 18 மனையிடங்களில் மனுதாரர் கோரிய 26808.45 சதுர அடி கொண்ட 14 மனையிடங்களுக்கு (பூங்காதிறவிடம்/ சாலைகள் நீங்கலாக) முறைப்படுத்துதல் கட்டணம் ஒருசதுரமீட்டர் ரூ.45/– என்றவிகிதத்திலும், வளர்ச்சிகட்டணம் ரூ.25/– என்றவிகிதத்திலும் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படாத 14 மனைகளுக்கு முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சிகட்டணம் செலுத்திடுமாறும், தானமாக வழங்கவேண்டிய பூங்காபரப்பு 3045 சதுரஅடிகள் கொண்ட திறந்தவெளி இடத்திற்கு உரிய பத்திரபதிவு ஆவணம் தயார் செய்து தானபத்திரம் வாயிலாகபதிவு செய்துதரவேண்டும் என மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணஎண். 6458/2021 நாள்.16.11.2021 அன்று 85.ஆர்.கொமாரபாளையம் கிராமஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனுதாரர் விற்பனை செய்யப்படாத 26808.45 சதுர அடி கொண்ட 14 மனையிடங்களின் பரப்பிற்கு ரூ.97025/– (ரூபாய் தொண்ணூற்று ஏழாயிரத்து இருபத்தி ஐந்து மட்டும்)–ஐ இ–சலான் எண்.20211206931097 மற்றும் 20211214992098 ,நாள்.06.12.2021 மற்றும் 15.12.2021–ல் இராசிபுரம் சார்நிலைக் கருவூலத்தில் உரிய அரசுத் தலைப்பிலும், வளர்ச்சிகட்டணமாக ரூ.53903/– (ரூபாய் ஐம்பத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து மூன்றுமட்டும்) Layout approval Development Charge – 85.R.Komarapalayam Panchayat-ல் பல்வகை வரவு இரசீதுஎண்.2823 மற்றும் 2825, நாள்.07.12.2021மற்றும் 14.12.2021–ல் செலுத்தியும் நகல்கள் இவ்வலுவலகத்தில் ஒப்படைப்பட்டுள்ளன.

எனவே 85.ஆர்.கொமாரபாளையம் ஊராட்சி சர்வேஎண்.21/10Pt,2B3Pt-ல்1.87 ஏக்கர்–ல் வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டு (பூங்கா இடம் நீங்கலாக) விற்பனை செய்யப்படாத 14 மனையிடங்கள் கீழ்க்கண்டவிபரப்படிஉள்ளன.

| வரிசைஎண் | மனையிடஎண் | மொத்தமனையிடங்கள் |
|---|---|---|
| 1 | 6 | 1 (ஒருமனையிடம்) |
| 2 | 7 | 1 (ஒருமனையிடம்) |
| 3 | 8 | 1 (ஒருமனையிடம்) |
| 4 | 9 | 1 (ஒருமனையிடம்) |
| 5 | 10 | 1 (ஒருமனையிடம்) |
| 6 | 21 | 1 (ஒருமனையிடம்) |

P. Kamal

V.S. Kavitha

(81)

| | | |
|---|---|---|
| 7 | 29 | 1 (ஒருமனையிடம்) |
| 8 | 31 | 1 (ஒருமனையிடம்) |
| 9 | 32W | 1 (ஒருமனையிடம்) |
| 10 | 34 | 1 (ஒருமனையிடம்) |
| 11 | 35 | 1 (ஒருமனையிடம்) |
| 12 | 36 | 1 (ஒருமனையிடம்) |
| 13 | 37 | 1 (ஒருமனையிடம்) |
| 14 | 38 | 1 (ஒருமனையிடம்) |
| | 32E, 33 | பூங்கா/ திறவிடத்திற்காகதானமாகஒப்படைக்கப்பட்டது |

மேற்கண்ட விபரப்படி விற்பனை செய்யப்படாத 14 மனையிடங்களை பின்வரும் நிபந்தனகளுக்குட்பட்டு இறுதி வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது

<u>நிபந்தனைகள்</u>

1. வரன்முறை செய்து வழங்கப்படும் இம்மனை வீடுமட்டும் கட்டுவதற்கு பயன்படுத்த வேண்டும். இம்மனையில் ஏற்கனவே கட்டிடங்கள் ஏதுமிருப்பின் அதற்குமான அங்கீகாரமாக இதனை கருத இயலாது. அபாயகரமான மற்றும் அருவருக்கதக்க தொழிற்சாலைகள் ஏதும் ஏற்படுத்திட அனுமதியில்லை.

2. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து, கட்டணம் செலுத்த வேண்டியிருப்பது, ஏதேனும் பின்னர் கண்டறியப்படின் அதனை மனுதாரர் செலுத்தவேண்டும்.

3. அரசின் கொள்கை அளவிலான மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் எதேனும் செய்து உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால், அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவர்.

4.பத்திரபதிவுகள் மற்றும் நிலஉடமை மாற்றங்களில் ஏற்படுத்தப்படும் சிவில் வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறினால் மனைப்பிரிவு அங்கீகாரம் ரத்து செய்திட ஏதுவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு– மனைப்பிரிவு வரைபடம் –1

(signature) 13 15-12-24

வட்டாரவளர்ச்சிஅலுவலர் (கி.ஊ)
இராசிபுரம் வட்டாரம்.

(initial) 15/12/21

பெறுநர்

திருமதி.கமலம் மற்றும் இருவர்,
5/166எ, கணபதிநகர்,
ஆண்டகளூர் கிராமம்,
இராசிபுரம்.

P. Kamal
K.P. [illegible]

நகல்.. 1. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், க.எண்.6/12,17 பரமத்தி ரோடு (தெற்கு பகுதி), நாமக்கல்– 637 001.

2. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), நாமக்கல் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

3. தலைவர், 85.ஆர்.கொமாரபாளையம் ஊராட்சி, இராசிபுரம் வட்டாரம். (அசல் தான பத்திரம் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது)

4. தி5 இருப்புக்கோப்பிற்கு

V.S. Kavitha